# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண்.37

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## 2014 – 2015


# நத்தம் ஆர். விசுவநாதன்

**மின்சாரம், மதுவிலக்கு மற்றும்**
**ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2014

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 – 2 |
| 2. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை – நிர்வாக அமைப்பு | 2 |
| 3. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம் | 2 – 11 |
| 4. | மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு | 11 – 21 |
| 5. | தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் | 21 – 29 |
| 6. | போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு | 30 – 39 |
| 7. | முடிவுரை | 39 – 40 |
| 8. | இணைப்புகள் 1 ï 5 | 41 – 53 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# மானியக் கோரிக்கை எண். 37

# மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2014–2015

## முன்னுரை

இந்த அரசு கள்ள மற்றும் போலி மதுபானங்களை ஒழித்திடும் கொள்கையை செயல்படுத்துவதில் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தயக்கமின்றி எடுத்து வெற்றி கண்டுள்ளது. கள்ள மதுபானம் அருந்தி மோசமாக பாதிக்கப்படும் மக்களின் சமூக பொருளாதார நலனை மேம்படுத்தும் உறுதியான நோக்கத்தை செயல்படுத்துவதற்காக இந்த அரசானது, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் மூலம் ஒரு சீரிய கொள்கையினை செயல்படுத்தி வருகிறது. இக்கொள்கையின் மூலம், சமூக விரோதிகளிடம் சட்ட விரோதமாகப் பணம் சேருவதை கட்டுப்படுத்துவதிலும் அரசு கருவூலத்திற்கு வருவாய் சென்றடைவதை உறுதி செய்வதிலும் வெற்றி பெற்றுள்ளது. நமது அண்டை மாநிலங்கள் அவற்றின் மதுவிலக்கை தளர்த்தி உள்ள நிலையில் நமது மாநிலத்தில்

மட்டும் முழு மதுவிலக்கை செயல்படுத்துவது இயலாத ஒன்றாகும். இம்மாநிலத்தின் மதுவிலக்கு கொள்கையானது நுகர்வோரின் தேவைகள் மற்றும் விருப்பங்களைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

## 2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை – நிர்வாக அமைப்பு

**2.1** தமிழ்நாடு அரசின் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் பின்வரும் நான்கு அமைப்புகள் செயல்படுகின்றன.

1. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்
2. மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு
3. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்)
4. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

**2.2** **1937** ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தையும், அச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளையும் செயல்படுத்துவதற்கு மதுவிலக்கு மற்றும்

ஆயத்தீர்வை ஆணையர் அவர்கள் பொறுப்பாவார். இதன் விவரங்கள் இணைப்பு–1–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**2.3** மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை குறித்த கொள்கைகளை உருவாக்குவது மற்றும் நடைமுறைப் படுத்துவதில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அரசுக்கு உதவியாக செயல்படுகிறார். அவருக்கு உதவியாக மாநில தலைமையிடத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் இரண்டு இணை ஆணையர்களும், அரசின் இணைச் செயலாளர் நிலையில் ஒரு நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரும் மற்றும் துணை ஆட்சியர் நிலையில் ஐந்து உதவி ஆணையர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

**2.4** மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்கள், 1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் வெவ்வேறு வழிவகைகளை நடைமுறைப் படுத்தி வருகின்றனர். மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு துணை ஆணையரும் (ஆயத்தீர்வை) மற்றும் பிற மாவட்டங்களில் துணை ஆட்சியர் நிலையில் உதவி ஆணையரும் (ஆயத்தீர்வை), இவர்களுக்கு உதவியாக

வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், ஆயத்தீர்வை ஆய்வாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**2.5** துணை ஆட்சியர் நிலையில் வடிப்பாலை அலுவலர்களும் மற்றும் ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும் முறையே, வடிப்பாலைகள் மற்றும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான, பீர் மற்றும் ஒயின் உற்பத்தித் தொழிற்சாலைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். **1937** ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் **1955** ஆம் ஆண்டின் மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்புச் சட்டம் மற்றும் அவற்றின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி ஆயத்தீர்வை விதிக்கப்படவேண்டிய பொருள்களுக்கு ஆயத்தீர்வை விதித்தல், சாராவி முறையாக பயன்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் ஆகிய பணிகளை இரசாயன தொழிற் சாலைகள் மற்றும் பிணைமுறி கிடங்குகளில் (Bonded Warehouses) மேற்கொள்வதற்காக வருவாய் துறை அலுவலர்களான வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் நிலையிலுள்ள அலுவலர்கள் முறையே ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும், பிணைமுறி

அலுவலர்களாகவும் (Bonded Manufactory Officers) பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

2.6 கரும்பிலிருந்து சர்க்கரை தயாரித்த பின் துணைப் பொருளாக உற்பத்தியாவது கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகும். நம் மாநிலத்தில், சாராவி உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருள் இதுவேயாகும். தற்போது நம் மாநிலத்தில் 46 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 16 கூட்டுறவுத் துறையிலும், 3 பொதுத் துறையிலும் மற்றும் 27 தனியார் துறையிலும் உள்ளன. இதுபற்றிய விவரங்கள் இணைப்பு – 2ï ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2.7 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின்படி, மாநில கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாட்டு அலுவலர் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் ஆவார். கருப்பஞ்சாற்றுக் கசண்டு வைத்திருத்தல், விற்பனை, பயன்பாடு, போக்குவரத்து, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவற்றிற்கான உரிமம் மற்றும் அனுமதி ஆணைகள் தகுதியுடைய அதிகாரிகளால் மேற்படி விதிகளின்படி வழங்கப்படுகின்றன.

2.8 கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி உரிமம் வழங்க மாவட்ட ஆட்சியர்கள் தகுதிவாய்ந்த அலுவலர்கள் ஆவர். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு நிர்வாக சேவைக் கட்டணமாக மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ. 300/– வீதம் வசூலிக்கப்படுகிறது.

வடிப்பாலைகள் மற்றும் சாராவி

2.9 இம்மாநிலத்தில் 19 வடிப்பாலைகள் சாராவி (Alcohol) உற்பத்தி செய்கின்றன. 19 வடிப்பாலைகளில் 17 வடிப்பாலைகள் தனியார் துறையிலும் மற்றும் 2 வடிப்பாலைகள் கூட்டுறவு துறையிலும் இயங்கி வருகின்றன. இவற்றின் விவரங்கள் இணைப்பு – 3–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.10 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் தயாரிப்பதற்கு மூலப் பொருளாக சாராவி பயன்படுத்தப்படுகிறது. மேலும் கல்வி நிறுவனங்கள், பரிசோதனைக் கூடங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் சாராவி குறைந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றது.

தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி **(Grain based ENA)**

**2.11** தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி உயர்தர இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது தமிழகத்தில் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி தயாரிக்கும் வடிப்பாலை எதுவும் இல்லை. எனவே, அரசின் முன் அனுமதி பெற்று தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி பிற மாநிலங்களிலிருந்து இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானத் தயாரிப்பாளர்களால் இறக்குமதி செய்யப்படுகிறது.

எத்தனால் **(Ethanol)**

**2.12** வாகனங்களிலிருந்து வெளிவரும் புகையினால் காற்று மாசுபடுதலைக் குறைப்பதற்காகவும், கச்சா எண்ணெய் இறக்குமதியினைக் குறைத்து அந்நியச் செலாவணியை சேமிப்பதற்காகவும், எத்தனாலை உற்பத்தி செய்து பெட்ரோலுடன் கலந்து எண்ணெய் நிறுவனங்கள் பயன்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசால் கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டு **1.1.2003** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

இருப்பினும் **13.12.2006** முதல் எத்தனால் உற்பத்தி நிறுத்தப்பட்டது. அரசு ஆணை (நிலை) எண். 12, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, நாள்.**26.03.2012**–ன்படி மீண்டும் எத்தனால் தயாரிக்க அனுமதி அளிக்கப்பட்டு, அதனடிப்படையில் 8 வடிப்பாலைகளுக்கு உரிமம் உள்ளன. இவற்றின் விவரங்கள் இணைப்பு–**4**–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**2.13** மேலும் **4.5** கோடி லிட்டர்கள் எத்தனால் உற்பத்தி செய்து வழங்க ஏதுவாக மேற்கண்ட வடிப்பாலைகளுக்கு **27.02.2013** முதல் **28.02.2014** வரை **1.5** லட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வடிப்பாலைகள் **31.03.2014** வரை **1,58,89,289** லிட்டர் எத்தனாலை எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளன. எத்தனால் உற்பத்தியால் கிடைக்கும் கூடுதல் வருவாயை சர்க்கரை ஆலைகளும் மற்றும் கரும்பு விவசாயிகளும் பெற்று பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்

**2.14** தமிழகத்தில் பதினொன்று இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்களும், ஏழு பீர் தயாரிக்கும் நிறுவனங்களும் மற்றும் ஒரு ஒயின் தயாரிக்கும் நிறுவனமும் இயங்கி வருகின்றன. இவற்றின் விவரங்கள் இணைப்பு–**5**–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அயல்நாட்டு மதுபானங்கள் இறக்குமதி

**2.15** அயல்நாட்டு சுற்றுலா பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நட்சத்திர அந்தஸ்து பெற்ற உணவு விடுதிகள் மற்றும் மனமகிழ் மன்றங்களுக்கு, அயல் நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்வதற்கு, உரிய சிறப்புக் கட்டணம் செலுத்திய பின்னர் அனுமதி ஆணைகள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அவர்களால் வழங்கப்படுகிறது. அயல் நாட்டு மதுபான வகைகளின் இறக்குமதியை சீரமைக்க **02.03.2012** முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் தனித்த முகவராக நியமிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்ய செலுத்தப்படும் சிறப்புக் கட்டணத் தொகையில் **3** சதவிகிதம் சேவைக் கட்டணமாக தமிழ்நாடு

மாநில வாணிபக் கழகத்தால் வசூலிக்கப்படுகிறது. சிறப்புக் கட்டணம் தவிர அயல்நாட்டு மதுபான விற்பனை மீது 58% மதிப்புக் கூட்டு வரியும் விதிக்கப்படுகிறது. ஏப்ரல் 2013 முதல் மார்ச் 2014 வரை சேவைக் கட்டணம் மூலமாக ரூ.9.44 லட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**2.16** அயல்நாட்டு மதுபானங்களின் சிறப்புக் கட்டணம் மூலமாக கிடைக்கப்பெற்ற வருவாய் பின்வருமாறு :

| வ. எண் | நிதியாண்டு | சிறப்புக் கட்டணம் |
|---|---|---|
| 1 | 2009–2010 | ரூ.1.57 கோடி |
| 2 | 2010–2011 | ரூ.1.86 கோடி |
| 3 | 2011–2012 | ரூ.1.96 கோடி |
| 4 | 2012–2013 | ரூ.2.70 கோடி |
| 5 | 2013–2014 | ரூ.3.30 கோடி |

## மாநில ஆய வில்லைகள்

**2.17** ஆயத்தீர்வை வருவாயை சரியாக கணக்கிடுவதற்கும், கள்ள மற்றும் போலி மதுபானங்களின் நடமாட்டம் மற்றும் விற்பனையைத் தடுக்கும் பொருட்டும்

2003 ஆம் ஆண்டு முதல் அப்போது நடைமுறையிலிருந்த கறுப்பு மையால் அச்சடிக்கப்பட்ட காகித ஆயவில்லைகளுக்குப் பதிலாக நவீன தொழில்நுட்பம் கொண்ட செயற்கை இழை ஆயவில்லைகளைப் பயன்படுத்துவதற்கு அரசு ஆணை பிறப்பித்தது. இதன் காரணமாக, அதிக பாதுகாப்பு அம்சங்கள் கொண்ட ஆயவில்லைகள் மதுபானம், பீர் மற்றும் ஒயின் பாட்டில்களின் மீது ஆயத்தீர்வை நோக்கத்திற்காக ஒட்டப்படுகிறது. தற்போது சராசரியாக மாதத்திற்கு 22.26 கோடி ஆயவில்லைகள் தேவைப்படுகிறது. ஆயவில்லைகள் விற்பனை மூலம் அரசுக்கு மாதம் ஒன்றிற்கு சுமார் ரூ.1.78 கோடி வருவாய் கிடைக்கிறது.

## 3. மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு

3.1 கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தலை ஒழிப்பதற்காகவும், அண்டை மாநிலங்களிலிருந்து போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் கடத்தி வரப்படுவதைத் தடுப்பதையும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு முதன்மை நோக்கமாகக்கொண்டு செயல்பட்டு வருகிறது.

**3.2** கூடுதல் காவல் துறை இயக்குநர் (அமலாக்கம்) இப்பிரிவின் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக ஒரு காவல் துறை தலைவரும் (அமலாக்கம்), சென்னையில் மத்திய புலன்விசாரணைப் பிரிவில் காவல் கண்காணிப்பாளர் ஒருவரும், சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய மூன்று மண்டலங்களில் தலா ஒரு காவல் கண்காணிப்பாளரும் (அமலாக்கம்) பணியாற்றுகின்றனர். மத்திய புலன் விசாரணைப் பிரிவில் காவல் கண்காணிப்பாளருக்கு உதவியாக **2** துணை காவல் கண்காணிப்பாளர்களும், **6** காவல் ஆய்வாளர்களும், **8** காவல் சார்பு ஆய்வாளர்களும் மற்றும் ஒரு தலைமைக் காவலரும் பணிபுரிந்து வருகின்றனர்.

**3.3** மாநிலத்தில் **94** அமலாக்கப் பிரிவுகள் இயங்குகின்றன. காவல் ஆய்வாளர்களின் தலைமையில் இயங்கும் இந்தப் பிரிவுகள் அனைத்தும் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் **1937**–ஐ அமல்படுத்துவதற்காக காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும், மாவட்டங்கள்/நகரங்களில் உள்ள துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மதுவிலக்கை அமல்படுத்துவதில் முதன்மைப் பொறுப்புடைய

மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆணையர்களின் நிர்வாக மற்றும் செயல்பாட்டு கட்டுப்பாட்டின்கீழ் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் மற்றும் அதனைச் சார்ந்த அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

சோதனைச் சாவடிகள்

**3.4** அண்டை மாநிலங்களிலிருந்து போலி / தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், எரிசாராயம் மற்றும் சாராய உறைகள், ஆகியவை தமிழ்நாட்டுக்குள் கள்ளத்தனமாக ஊடுருவதைத் தடுப்பதற்காக நாகப்பட்டினம், திருவள்ளூர், வேலூர், கடலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி, ஈரோடு, சேலம், நீலகிரி, திருவாரூர், திருப்பூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் சென்னை மாநகரிலும் **29** மதுவிலக்கு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. **2013** ஆம் ஆண்டில், கன்னியாகுமரி **(1)**, தேனி **(1)**, விழுப்புரம் **(1)**, கடலூர் **(1)**, வேலூர் **(2)**, திருவள்ளூர் **(3)**, கிருஷ்ணகிரி **(4)**, சேலம் **(1)** மற்றும் நாகப்பட்டினம் **(2)** ஆகிய மாவட்டங்களில் மேலும் **16** மதுவிலக்கு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆக, தற்போது மொத்தம் **45** மதுவிலக்கு சோதனைச் சாவடிகள் தமிழ் நாட்டில் உள்ளன. இது

தவிர, நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் **6** நடமாடும் சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. **2013–**ஆம் ஆண்டில் மேலும் ஒரு நடமாடும் சோதனைச் சாவடி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## இரகசிய தகவலாளர்களுக்கு வெகுமதிகள்

**3.5** அரசு கடிதம் (டி) எண். **245**, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, நாள் **23.12.2013–**ல் எரிசாராயம் கடத்துதல் பற்றி மதுவிலக்கு அமலாக்க அலுவலர்களுக்கு தகவல்கள் தரும் தகவலாளர்களுக்கு வெகுமதிகள் வழங்குவதற்காக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.**15** லட்சம் ஒப்பளிப்பு செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. இத் தகவலாளர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மூலம் வெகுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## மதுவிலக்கு உதவி மையம் – 10581

**3.6** மதுவிலக்கு உதவி மையத்திற்காக கட்டணமில்லா தொலைபேசி எண்.**10581** ஒன்று ஏற்படுத்த அரசால்

அனுமதிக்கப்பட்டு அது மதுவிலக்கு தலைமையக மத்திய புலன்விசாரணைப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் நிறுவப்பட்டுள்ளது. கள்ளச் சாராயம் காய்ச்சுதல், எரிசாராயம் கடத்துதல், போலி மதுபானம், கள்ளச் சாராயம் விற்பனை ஆகிய மதுவிலக்குக் குற்றங்கள் தொடர்பாக பொது மக்கள் மற்றும் தகவலாளர்கள் இலவசமாக தகவல் அளிப்பதற்கு ஏதுவாக இருப்பது இச்சேவை மையத்தின் நோக்கமாகும். இந்தக் கட்டணமில்லா சேவை மையம் 24 மணிநேரமும் மத்திய புலன் விசாரணைப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் செயல்படுகிறது. 24.07.2013 முதல் மேற்கண்ட கட்டணமில்லா எண் செயல்பட்டு வருகிறது.

**2013–14 ஆம் நிதியாண்டில் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்**

3.7 2013–14 ஆம் நிதியாண்டில் ரூ.2.76 கோடி மதிப்புள்ள 6.9 லட்சம் லிட்டர் கள்ளச்சாராயம், ரூ. 1.11 கோடி மதிப்புள்ள 1.11 லட்சம் லிட்டர் எரி சாராயம், ரூ. 10.23 கோடி மதிப்புள்ள பிற மாநிலங்களில் இருந்து கடத்தி வரப்பட்ட 10.23 லட்சம் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான பாட்டில்கள் மற்றும் ரூ. 16.46 லட்சம் மதிப்புள்ள மற்ற மதுபான வகைகள் ஆகியவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. மதுவிலக்குக்

குற்றங்களில் பயன்படுத்தப்பட்ட 2073 மோட்டார் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. விழுப்புரம் (2), தஞ்சாவூர் (1), காஞ்சிபுரம் (1), திருவண்ணாமலை (1), திருவள்ளூர் (1) திருப்பூர் (1) மற்றும் நாகப்பட்டினம் (1) ஆகிய மாவட்டங்களில் 8 இடங்களில் இயங்கி வந்த போலி மதுபான உற்பத்திக் கூடங்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன.

**3.8** மாநிலம் முழுவதும் மத்திய புலன் விசாரணைப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளின் மூலம் சேகரிக்கப்படும் நுண்ணறிவு தகவல்களின் அடிப்படையில் திடீர் வாகன சோதனைகள், முறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன. 2013–14 ஆம் ஆண்டில் 48 எரிசாராயக் கடத்தல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1 பஸ், 2 டிராக்டர்கள், 11 லாரிகள், 7 வேன்கள், 22 கார்கள், 3 ஈப்புகள், 9 ஆட்டோக்கள் மற்றும் 7 இருசக்கர வாகனங்கள் உட்பட மொத்தம் 62 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

## கள்ளச்சாராய இறப்பு சம்பவங்களைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்

**3.9** கள்ளச்சாராய இறப்புக்கான முக்கிய காரணமாக இருந்த “மெத்தனால்” 2002 ஆம் ஆண்டில், 1937 ஆம் ஆண்டு

தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் வரம்புக்குள் கொண்டு வரப்பட்டது. மேலும், மெத்தனால் வைத்திருத்தல், பயன்படுத்துதல், எடுத்துச் செல்லுதல், இறக்குமதி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவற்றைக் கடுமையாகக் கட்டுப்படுத்திடவும், 2002 ஆம் ஆண்டில், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டன. மாநிலத்தில், மெத்தனால் பயன்படுத்த மற்றும் வைத்திருக்க உரிமம் பெற்ற தொழிற்சாலைகளைச் சோதனையிட, மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவர்களால் அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கை அமலாக்க தலைமையிடத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

**3.10** இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால், **2011** முதல் கள்ளச்சாராய இறப்புகள் ஏதுமில்லை.

## கள்ளச்சாராயத்தினால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து விழிப்புணர்வு

**3.11** சாராயம் அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொது மக்களிடையே மாநிலம் தழுவிய விழிப்புணர்வு

ஏற்படுத்த, முதன் முதலில் 2003–04 ஆம் ஆண்டில் ரூ. 10 லட்சமும், 2004–05 ஆம் ஆண்டில் ரூ.30 லட்சமும் அரசால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது. ஏழு ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் 2011–12 மற்றும் 2012–13 ஆம் ஆண்டில் இதுபோன்ற விழிப்புணர்வு முகாம்கள் நடத்த அரசால் தலா ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது.

3.12 2013–14 ஆம் நிதி ஆண்டில், அரசாணை (நிலை) எண்.77, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, நாள் 23.12.2013–ல், சாராயம் அருந்துவதற்கு எதிராக விழிப்புணர்வு முகாம்கள் நடத்த தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் சொந்த நிதியிலிருந்து ரூ.1.00 கோடி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையருக்கு வழங்க அரசால் அனுமதியளிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ரூ.2.00 லட்சம் வீதமும், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 காவல்துறை ஆணையரகங்களுக்கு தலா ரூ.4.00 லட்சம் வீதமும், ஒதுக்கீடு செய்யப்பட்டது. அமலாக்கப்பிரிவு கூடுதல் காவல் துறை இயக்குநர் அவர்களுடன் இணைந்து, மாநில தலைமையிடத்தில் விழிப்புணர்வு முகாம் நடத்த மீதம் உள்ள ரூ.16.00 லட்சம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர்

அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதியின் மூலம் மாநிலம் முழுவதும் மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பேரணிகள், முகாம்கள், கருத்தரங்குகள், தெரு நாடகங்கள், துண்டுப்பிரசுரங்கள், பொது இடங்களில் விளம்பரங்கள், கட்டுரைப் போட்டிகள் மற்றும் பேச்சுப்போட்டிகள் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

மனந்திருந்திய மதுவிலக்கு குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு நிதி

**3.13** மாநிலம் முழுவதும் கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்ட குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக, **2003–2004** ஆம் ஆண்டில் முதன் முதலாக அரசு கடனுதவி வழங்கியது.

**3.14** **2011–12** ஆம் ஆண்டில் கடனாக வழங்கப்பட்ட மறுவாழ்வு நிதி ரூ.**2.20** கோடியிலிருந்து ரூ.**5** கோடியாக உயர்த்தப்பட்டதோடு, மானியமாகவும் மாற்றப்பட்டது. இதேபோன்று, **2012–13** ஆம் ஆண்டிற்கும், ரூ.**5** கோடி மறுவாழ்விற்காக மானியமாக வழங்கப்பட்டது.

**3.15** அரசாணை (நிலை) எண்.60, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, நாள் 19.09.2013–ல், 2013–14 ஆம் ஆண்டிற்கு, கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு சிறைத்தண்டனை பெற்று விடுதலையாகி திருந்துபவர்களின் பொருளாதார மறுவாழ்விற்காக ரூ.5 கோடி அரசால் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**3.16** மதுவிலக்கு குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக, வெவ்வேறு திட்டங்களான கறவை மாடு விநியோகித்தல், ஆடுகள் வளர்த்தல், காய்கறி, பூ, பழங்கள், மீன் போன்ற சிறுவியாபாரம் செய்வதற்கு கைவண்டிகள் வழங்குதல், தேன் சேகரிப்பு அலகுகள் மற்றும் புளி பதனிடும் அலகுகள் நிறுவுதல், சிற்றுண்டி மற்றும் தின்பண்டங்கள் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றிற்காக நிதி உதவி வழங்கப்படுகின்றது.

### தடுப்புக்காவல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1982)

**3.17** மாநிலத்தில் பொது ஒழுங்கு சீர்குலைவதற்கு மூலகாரணம் கள்ளச்சாராயக்காரர்கள், மருந்து சரக்குக்

குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசைப்பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் காணொலித் திருடர்கள் போன்றவர்களின் அபாயகரமான நடவடிக்கைகள் ஆகும். 1982 ஆம் ஆண்டில், இந்தக் குற்றவாளிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வழிவகை செய்யும் தமிழ்நாடு சட்டம் 14/1982 இயற்றப்பட்டது.

3.18 இச்சட்டத்தின்படி, மேற்கூறிய குற்றவாளிகள் ஓராண்டு வரை தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றனர். 2013–2014 ஆம் ஆண்டில், மதுவிலக்கு குற்றங்களில் தொடர்ந்து ஈடுபட்ட 225 மதுவிலக்குக் குற்றவாளிகள் இச்சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## 4. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

4.1 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) 23.05.1983 அன்று கம்பெனிகள் சட்டம், 1956–ன் கீழ் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் சாராயத்தை தமிழ்நாட்டில் மொத்த விற்பனை செய்யும் உரிமையை தனியாரிடமிருந்து கையகப்படுத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட நிறுவனம் ஆகும்.

**4.2** தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் **1937,** (தமிழ்நாடு சட்டம் X/1937) பிரிவு **17–C (1–A)** (a) மற்றும் 17-C(1-B)(a) –ன் படி தமிழ்நாடு முழுவதும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளை மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மது, பீர் மற்றும் ஒயின் வகைகளையும் விற்பனை செய்கிறது. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் **23.05.1983** முதல் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது வகைகள், பீர் மற்றும் ஒயின் ஆகியவற்றை மொத்த விநியோகம் செய்து வருகிறது. இந்நிறுவனம் மதுபானச் சில்லறை விற்பனையையும் **29.11.2003** முதல் ஏற்று நடத்தி வருகிறது.

## இயக்குநர் குழுமம்

**4.3** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இயக்குநர் குழுமம் நிறுவனத்தின் செயல்பாடுகளை இயக்கவும், கட்டுப்படுத்தவும் செய்கிறது. மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை) அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். அரசு

முதன்மைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை, அரசு முதன்மைச் செயலாளர், வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை, ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியோர் இயக்குநர் குழுமத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

**4.4** இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் **ரூ.15.00** கோடி ஆகும். மொத்த பங்கு மூலதனமும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

## தலைமை அலுவலகம்

**4.5** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநர் மற்றும் இணை மேலாண்மை இயக்குநர் (கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் நிலையில்) அவர்களுக்கு உதவியாக முதன்மை பொது மேலாளர் (நிதி) மற்றும் நிறுவனச் செயலர், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் பொது மேலாளர் (மொத்த விற்பனை மற்றும் நிர்வாகம்) மற்றும் பொது

மேலாளர் (சில்லறை விற்பனை) மற்றும் தொழிலாளர் துணை ஆணையர் நிலையில் பொது மேலாளர் (பணியாளர் நலன்) மற்றும் பிற அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்.

மண்டல அலுவலகங்கள், மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், மதுபானக் கிடங்குகள், கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்

**4.6** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் **5** மண்டல அலுவலகங்கள் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் தலைமையில், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு **38** மாவட்ட மேலாளர் அலுவலகங்களும் மற்றும் **43** இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகளும் உள்ளன. மாவட்டத்தில் உள்ள கிடங்குகள், மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்கள் ஆகியவை அந்தந்த மாவட்ட மேலாளரால் நிர்வகிக்கப்படுகின்றன.

சில்லறை விற்பனைக் கடைகளின் அமைவிடம்

4.7 2003 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகளில் அமைந்த விதி எண்.8—ன்படி மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வழிபாட்டுத் தலம் மற்றும் கல்வி நிறுவனங்களிலிருந்து 50 (ஐம்பது) மீட்டர் தூரத்திற்குள்ளும், பிற பகுதிகளில் 100 (நூறு) மீட்டர் தூரத்திற்குள்ளும் மதுபானக் கடைகள் அமைக்கக்கூடாது. இந்த வரையறைகள் 'வணிகம்' அல்லது 'தொழில்' பகுதி என்று வளர்ச்சிக் குழுமம் அல்லது நகரத்திட்டக்குழுமத்தால் வரையறுக்கப்பட்ட பகுதிகளுக்குப் பொருந்தாது. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் இந்த விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ளன.

சில்லறை விற்பனைப் பிரிவு பணியாளர்கள்

4.8 6,800 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் மற்றும் 4,271 சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்களும் மாநிலத்தில் இயங்கி வருகின்றன. சில்லறை விற்பனைக் கடைகளில் ஒப்பந்த/தொகுப்பூதிய அடிப்படையில் 7,039 கடை

மேற்பார்வையாளர்களும், **15,431** விற்பனையாளர்களும் மற்றும் **3,634** உதவி விற்பனையாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

**4.9** பல்வேறு இடங்களில் இயங்கும் சில்லறை விற்பனைக் கடைகளில் பணிபுரிய ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| இடம் | மேற்பார்வையாளர் எண்ணிக்கை | விற்பனையாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| மாநகராட்சி | 1 | 4 |
| நகராட்சி மற்றும் பேரூராட்சி | 1 | 3 |
| ஊராட்சி | 1 | 2 |

வேலை நேரம்

**4.10** தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனைக் கடைகள் ஒவ்வொரு நாளும் காலை **10.00** மணி முதல் இரவு **10.00** மணிவரை செயல்படுகின்றன (**12** மணி நேரம்). விற்பனையாளர்கள் மற்றும் உதவி விற்பனையாளர்கள் **6** மணி நேரம் இரண்டு முறை மாற்றங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் அனைவரும் வாரத்தில் ஒரு நாள் விடுமுறைக்குத் தகுதியுடையவராவார்கள்.

## சில்லறை விற்பனைப் பிரிவு பணியாளர் நலத்திட்டங்கள்

**4.11** சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு மாதத் தொகுப்பூதியத்துடன் ஒவ்வொரு ஆண்டும் 20 சதவீதம் போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணியாளர்களின் நலனுக்காக பல்வேறு மருத்துவத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம் (EPF Scheme), தொழிலாளர் வைப்புநிதியுடன் இணைந்த காப்புறுதித் திட்டம் (EDLI Scheme), குடும்ப நல நிதித் திட்டம் (Family Benefit Fund Scheme), காப்புத் தொகைகளின் மீதான வட்டி ஆகிய திட்டங்கள் சில்லறை விற்பனைப் பணியாளர்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## மதுவிற்பனை இல்லாத நாட்கள்

**4.12 03.01.2012** முதல் மதுவிற்பனை இல்லாத நாட்கள் 5–லிருந்து 8–ஆக உயர்த்தப்பட்டு உள்ளன. அவை காந்தி ஜெயந்தி தினம், திருவள்ளுவர் தினம், மகாவீர் ஜெயந்தி தினம், நபிகள் நாயகம் பிறந்த நாள், வடலூர் இராமலிங்கர் நினைவு நாள், சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் மே தினம் ஆகியவை ஆகும்.

## பற்றுச்சீட்டு இயந்திரங்கள்

**4.13** பற்றுச்சீட்டுகளில் கையினால் எழுதும்போது ஏற்படும் தாமதம் மற்றும் தவறுகளைத் தவிர்க்கவும் மற்றும் சில்லறை விற்பனைக் கணக்குகள் மற்றும் சரக்கு இருப்பு விவரங்களைச் சுலபமாகப் பராமரிப்பதற்காகவும், பற்றுச்சீட்டு இயந்திரங்கள் தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனைக் கடைகளில் நிறுவப்பட்டு வருகிறது. சென்னையில் **415** மதுபானக் கடைகளில் தற்போது பற்றுச்சீட்டு இயந்திரங்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள **2085** பற்றுச் சீட்டு இயந்திரங்கள் கடைகளில் நிறுவப்பட்டு வருகின்றன.

## அரசு வருவாய்

**4.14** மதுபான விற்பனை மூலம் அரசு ஈட்டிய வருவாய் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வரிசை எண் | ஆண்டு | ஆயத்தீர்வை வருவாய் | விற்பனை வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1 | 2003-04 | 1657.10 | 1982.83 | 3639.93 |
| 2 | 2004-05 | 2549.00 | 2323.03 | 4872.03 |
| 3 | 2005-06 | 3176.65 | 2854.12 | 6030.77 |
| 4 | 2006-07 | 3986.41 | 3487.20 | 7473.61 |
| 5 | 2007-08 | 4764.05 | 4057.11 | 8821.16 |
| 6 | 2008-09 | 5755.42 | 4846.08 | 10601.50 |
| 7 | 2009-10 | 6740.59 | 5757.63 | 12498.22 |
| 8 | 2010-11 | 8115.90 | 6849.52 | 14965.42 |
| 9 | 2011-12 | 9956.06 | 8125.10 | 18081.16 |
| 10 | 2012-13 | 12125.31 | 9555.36 | 21680.67 |
| 11 | 2013-14 (உத்தேசமாக) | 5034.82(*) | 16606.32 (*) | 21641.14 |

(*) ஆயத்தீர்வை வருவாய் குறைவாகவும், விற்பனை வரி அதிகமாகவும் இருப்பது வரி விதிப்பு முறைகளில் செய்யப்பட்ட சில மாற்றங்களினால் ஆகும்.

## 5. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

### நிர்வாக அமைப்பு

5.1 உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் கீழ் இயங்கும் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது காவல்துறை கூடுதல் இயக்குநர், குற்றம் அவர்களின் தலைமையில், ஒரு காவல்துறை தலைவர் (Anti Narcotic Task Force), 1 காவல் கண்காணிப்பாளர், 1 கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 12 துணை காவல் கண்காணிப்பாளர்கள், 16 காவல் ஆய்வாளர்கள், 17 உதவி காவல் ஆய்வாளர்கள் மற்றும் 126 காவலர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது.

5.2 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது (குற்றப் புலனாய்வு துறை) சென்னையில் 17.12.1963 அன்று ஏற்படுத்தப்பட்டது. 1987, 1990, 1994, 1995 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசு ஆணைகளின்படி திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திண்டுக்கல், தேனி, விழுப்புரம், இராமநாதபுரம், கோயம்புத்தூர், தூத்துக்குடி, வேலூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் போதைப் பொருள்

நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது மொத்தம் 15 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வருகின்றன. போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களைத் தயாரித்தல், பயன்படுத்துதல், கடத்துதல் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய நுண்ணறிவு தகவல்களைச் சேகரித்தல் மற்றும் இந்த குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வது ஆகியவை இப்பிரிவின் முக்கிய பணிகள் ஆகும்.

## மத்திய போதைப் பொருள் பிரிவுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்

**5.**3 மத்திய அரசின் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம், 1985 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டு அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள போதைப் பொருள் தடுப்புப் பிரிவுடன் இணைந்து பணியாற்றுகிறது. மத்திய அரசின் போதைப் பொருள் தடுப்புப் பிரிவானது கஞ்சா செடிகள் பயரிடப்படும் இடங்களின் விவரங்களைப் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவுக்கு அளித்து வருகிறது. மத்திய போதைப்

பொருள் தடுப்புப் பிரிவானது, மாநில போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவின் அலுவலர்களுக்கு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் குறித்த சிறப்பு பயிற்சிகளை அளிக்கிறது. இப்பயிற்சியானது போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.

## 5.4 போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம் (1985) பற்றிய முக்கிய விவரங்கள்

- எந்த ஒரு நபரும் போதை மருந்து அல்லது மனமயக்கப் பொருட்கள் எதையும் தயாரிக்கவோ, உற்பத்தி செய்யவோ, கைவசம் வைத்திருக்கவோ, விற்கவோ, வாங்கவோ, கொண்டுசெல்லவோ, பயன்படுத்தவோ, ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யவோ கூடாது.
- எந்த ஒரு நபரும் கோகோ தாவரத்தைப் பயிரிடவோ அல்லது அதன் யாதொரு பகுதியையும் சேகரித்து வைத்திருக்கவோ கூடாது.
- எந்த ஒரு நபரும், பாப்பி அல்லது கஞ்சா செடியினை பயிரிடக்கூடாது.

- மருத்துவம் மற்றும் அறிவியல் காரணங்களுக்காக கோகோ, ஓபியம், பாப்பி அல்லது கஞ்சா செடியினை மத்திய அரசின் அனுமதியுடன்தான் பயிரிட வேண்டும்.
- இச்சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றவாளி எந்த ஒரு சொத்தையும் வாங்கி இருந்தாலோ அல்லது பெற்றிருந்தாலோ அல்லது பயன்படுத்தியிருந்தாலோ, புலனாய்வு அதிகாரி நம்பத்தகுந்த காரணங்கள் அடிப்படையில் அவற்றை பறிமுதல் செய்ய ஆணை பிறப்பிக்கலாம். புலனாய்வு அதிகாரி அல்லது தகுதி வாய்ந்த அதிகார அமைப்பின் முன்அனுமதியின்றி அத்தகைய சொத்தின் உரிமையாளர் அதனை விற்கவோ அல்லது மாற்றம் செய்யவோ அல்லது வேறு காரணங்களுக்காக பயன்படுத்தவோ கூடாது.

## 5.5 போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம், 1985–ல் கூறப்பட்டுள்ள தண்டனை விவரங்கள்

- 1 கிலோ வரை கஞ்சா அல்லது 5 கிராம் வரை ஹெராயின் (குறைந்த அளவு) வைத்திருந்தால் ஆறுமாத காலம் வரை சிறைத்தண்டனை அல்லது ரூ.10,000/– அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.
- 1 கிலோ முதல் 20 கிலோ வரை கஞ்சா அல்லது 6 முதல் 250 கிராம் வரை ஹெராயின் (நடுத்தர அளவு) வைத்திருந்தால் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது ரூ.1 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.
- 20 கிலோவிற்கு மேல் கஞ்சா அல்லது 250 கிராமிற்கு மேல் ஹெராயின் (வணிக அளவு) வைத்திருந்தால் 10 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது ரூ.1 லட்சம் முதல் ரூ.2 லட்சம் வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

- இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றங்களில் தொடர்ந்து ஈடுபட்டால் அதிகபட்ச சிறைத்தண்டனையின் ஒன்றரை மடங்கு வரை நீட்டிக்கத்தக்க கடுங்காவல் சிறைத்தண்டனையுடன் மற்றும் அதிகபட்ச தண்டத் தொகையில் ஒன்றரை மடங்கு வரை நீட்டிக்கத்தக்க தண்டமும் விதித்து தண்டிக்கப்படத்தக்கவராவார்.
- எவரேனும் இச்சட்டத்தின் கீழ் தொடர்ந்து தண்டிக்கப்படக் கூடிய குற்றங்கள் செய்திருந்தாலோ அல்லது செய்ய முயன்றாலோ அல்லது குற்றமுறு சதியில் ஈடுபட்டு இருந்திருந்தாலோ மற்றும் தொடர்ந்து வணிக அளவிற்கு போதை மருந்துகள் அல்லது மனமயக்கப் பொருட்களை வைத்திருந்தாலோ மற்றும் மேற்படி சட்ட விரோத செயல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிதியுதவி செய்திருந்தாலோ, அவர் மரண தண்டனை விதித்து தண்டிக்கப்படத்தக்கவராவார்.

## போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் 1988 (PIT NDPS Act-1988)

**5.6** **1988** ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் **46/1988)** மத்திய அரசால் இயற்றப்பட்டு **01.07.1988** முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களை கள்ளத்தனமாக கடத்தும் நபர்களை காவலில் வைக்க, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் ஒரு ஆண்டும் அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகளும் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகளை தடுப்புக் காவலில் வைக்கலாம்.

## போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருட்களின் பயன்பாட்டை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

**5.7** கடந்த ஆண்டில் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு **1687** வழக்குகளில் ஈடுபட்டிருந்த **1707** குற்றவாளிகளிடமிருந்து **1,572.785** கிலோ உலர் கஞ்சா, **470** கிராம் ஹெராயின், **1** கிலோ மெத்தகுலோன், **1.520** கிலோ ஹாசிஸ் ஆயில், **2.600** கிலோ எப்பிட்ரின், **270** கிலோ கஞ்சா

செடிகள் மற்றும் 1.850 கிலோ பாப்பி ஓடுகள் ஆகிய போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதன் மொத்த மதிப்பு ரூ.2.54 கோடி ஆகும். மேலும், 2013 ஆம் ஆண்டில் 18 மருந்து சரக்கு குற்றவாளிகள் தமிழ்நாடு தடுப்புக் காவல் சட்டம் 14/1982–கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## சர்வதேச போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் தடுப்பு நாள்

**5.8** ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்தில் ஜுன் மாதம் 26–ஆம் நாள் சர்வதேச போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் தடுப்பு நாளாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் தடுப்புக்காக அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மக்களுக்கு தெரியப்படுத்தும் விதமாக இந்நாள் உகந்த முறையில் அனுசரிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், மாணவர்கள், கல்வி நிறுவனங்கள், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலுவலர்கள், போதைப் பொருள் கட்டுப்பாட்டுத் துறை அலுவலர்கள், கிழக்கு கடலோரக்காவல் மண்டலம் மற்றும் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் தமிழ்நாடு கிளை, விஸ்டம்

மருத்துவமனை (மறுவாழ்வு மையம்) போன்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பலரால் பொதுமக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் இந்நாள் அனுசரிக்கப்பட்டது.

## 5.9 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை விவரங்கள்

1. பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே போதைப் பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு நடவடிக்கையினை அதிகளவில் மேற்கொள்ளுதல். இரயில் நிலையம், பஸ் நிலையம் மற்றும் பள்ளிகள், கல்லூரிகளின் அருகில் தீவிர போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்.

2. போதைப் பொருள் தடுப்பு சட்டத்தினை சிறப்பாக அமல்படுத்துவதற்கு, போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினருடன் ஒருங்கிணைந்து போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவின் காவல் அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்.

3. கூரியர் நிறுவனங்கள் நடவடிக்கையை பற்றிய நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து நடவடிக்கை எடுத்தல்.

4. தமிழ்நாட்டில் கஞ்சா பயிரிடுவதை தடுக்க வனத்துறையினருடன் ஒருங்கிணைந்து தடுப்பு நடவடிக்கையை எடுத்தல் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் சாலை

வழியாகவும் மற்றும் இரயில் மூலமாகவும் கஞ்சா கடத்திவருவதைத் தடுத்து நிறுத்துதல்.

5. போதைப் பொருட்கள் சம்மந்தமான குற்றங்களுக்கு எதிராக போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம் 1985 –ஐ தீவிரமாக அமல்படுத்த மற்ற துறையினருடன் ஒருங்கிணைந்து கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளல்.

6. சுகாதாரத் துறையின் மருந்து ஆய்வாளர்களுடன் இணைந்து பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் உள்ள மருந்து கடைகளையும், புகாருக்குள்ளாகும் மற்ற மருந்துக் கடைகளையும் சோதனை செய்து கல்வி நிறுவனங்களுக்கு அருகில் போதைப் பொருள் விற்பனையை ஒழித்தல்.

7. தமிழ்நாடு சட்டம் 14/1982–ன் கீழ் அதிகப்படியான போதைப் பொருள் குற்றவாளிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

## 6. முடிவுரை

கள்ளச்சாராயம் வடித்தல், தவறான காரணங்களுக்கு சாராவியைப் பயன்படுத்துதல், போலி மற்றும் இரண்டாம்தர மதுபானங்களை எடுத்துச் செல்லுதல், விற்பனை செய்தல் ஆகியவற்றை ஒழித்திடும் திறமையான ஆயத்தீர்வை நிர்வாகத்தை அளிப்பதில் இந்த அரசு முனைப்புடன் உள்ளது.

இதன் விளைவாக பல வருடங்களாக கள்ளச்சாராயத்தினால் உயிரிழப்புகள் ஏற்படாமல் தடுக்கப்பட்டுள்ளன. மக்களிடையே மதுவினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிரத்தையுடன் முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதைப்போலவே, போதைப் பழக்கம் ஒடுக்கப்படுதல், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருள்களின் பயன்பாடு மற்றும் கடத்துதல் ஆகியவற்றிற்கு எதிராக எழுச்சிமிக்க விழிப்புணர்வு முகாம்கள் நடத்திட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அமலாக்க நடவடிக்கைகளை பலப்படுத்துவதன் மூலம் கள்ளச்சாராயம் மற்றும் போலி மதுபானங்களை முற்றிலுமாக ஒழிக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளும் அதே வேளையில் வருவாய் ஈட்டுதலை நோக்கமாகக் கொள்ளாமல் மக்களின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வை பேணும் எண்ணத்துடன் அரசின் நடவடிக்கைகள் தொடர்ந்து அமையும்.

**நத்தம் ஆர். விசுவநாதன்**

**மின்சாரம், மதுவிலக்கு மற்றும்**
**ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**

# இணைப்பு – 1

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் மற்றும் விதிகள்

| | |
|---|---|
| 1 | தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937 (தமிழ்நாடு சட்டம் X/1937). |
| 2 | தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகள், 1958. |
| 3 | தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி , மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்சு பாலிஷ்) விதிகள், 1959. |
| 4 | தமிழ்நாடு தீர்வு செய்ய வேண்டிய பொருள் (தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் பறிமுதல் செய்யப்பட்டவை) விதிகள், 1979. |
| 5 | தமிழ்நாடு வடிப்பாலை விதிகள், 1981. |
| 6 | தமிழ்நாடு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் (உற்பத்தி) விதிகள், 1981. |
| 7 | தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள், 1981. |
| 8 | தமிழ்நாடு மதுபானம் (இடமாற்றம் ) விதிகள், 1982. |
| 9 | தமிழ்நாடு மதுபானம் (மொத்த விற்பனையில் வழங்கல்) விதிகள், 1983. |
| 10 | தமிழ்நாடு மதுபானம் சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகள், 2003. |
| 11 | தமிழ்நாடு பீர் வடிப்பாலை விதிகள், 1983. |
| 12 | தமிழ்நாடு மதுவிலக்கு மேல்முறையீடு மற்றும் சீராய்வு விதிகள், 1983. |
| 13 | தமிழ்நாடு குளோரல் ஹைட்ரேட் விதிகள், 1984. |

| | |
|---|---|
| 14 | தமிழ்நாடு மாஸ் ஒயின் விதிகள், 1984. |
| 15 | தமிழ்நாடு சாராவி தயாரித்தல் (கட்டுப்பாடு ) விதிகள், 1984. |
| 16 | தமிழ்நாடு சாராவி தயாரித்தல் (மாநிலத்திற்குள் தொழிலும் மற்றும் வணிகம்) கட்டுப்பாடு விதிகள், 1985. |
| 17 | தமிழ்நாடு போதை மருந்துகள் விதிகள், 1985. |
| 18 | தமிழ்நாடு மதுபானம் (சொந்த பயன்பாட்டிற்கான உடைமை) விதிகள், 1996. |
| 19 | தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள், 2000. |
| 20 | தமிழ்நாடு ஒயின் (உற்பத்தி ) விதிகள், 2006. |
| | இத்துறையால் செயல்படுத்தப்படும் மத்திய அரசுச் சட்டங்கள் |
| 1 | மருந்து மற்றும் ஒப்பனைப்பொருட்கள் (ஆயத்தீர்வை) சட்டம், 1955. |
| 2 | மருந்து மற்றும் ஒப்பனைப்பொருட்கள் (ஆயத்தீர்வை) விதிகள், 1956. |
| 3 | போதை மருந்துகள்– மன மயக்கப் பொருட்கள் சட்டம், 1985. |
| 4 | போதை மருந்துகள்– மன மயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம், 1988. |

# இணைப்பு – 2

## தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு கொள்ளளவு பற்றிய விவரங்கள்

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | அனுமதிக்கப் பட்ட கொள்ளவு (மெட்ரிக் டன்) | உற்பத்தி விவரம் (அக்டோபர் 2012 – செப்டம்பர் 2013) (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | கூட்டுறவுத்துறை திருவாளர்கள் | | |
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், திருப்பூர் மாவட்டம். | 11000.000 | 3482.906 |
| 2 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம் மாவட்டம். | 12000.000 | 5050.000 |
| 3 | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், திருவள்ளூர் மாவட்டம். | 14000.000 | 11053.800 |
| 4 | தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், தருமபுரி மாவட்டம். | 21400.000 | 9563.829 |
| 5 | சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், தருமபுரி மாவட்டம். | 12000.000 | 13895.350 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 6 | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், மதுரை மாவட்டம். | 17000.000 | 10645.030 |
| 7 | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், வேலூர் மாவட்டம். | 14500.000 | 7269.000 |
| 8 | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், வேலூர் மாவட்டம். | 17620.000 | 5791.250 |
| 9 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், வேலூர் மாவட்டம். | 21000.000 | 13450.000 |
| 10 | செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், விழுப்புரம் மாவட்டம். | 16000.000 | 18403.000 |
| 11 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், அலகு–1, விழுப்புரம் மாவட்டம். | 15000.000 | 28380.000 |
| 12 | எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், கடலூர் மாவட்டம். | 12000.000 | 12549.286 |
| 13 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை, அலகு–2, விழுப்புரம் மாவட்டம். | 12000.000 | 22908.000 |
| 14 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாமக்கல் மாவட்டம். | 19000.000 | 15485.040 |
| 15 | என்.பி.கே. ஆர்.ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாகப்பட்டினம் மாவட்டம். | 14000.000 | 13895.000 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 16 | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், திருவண்ணாமலை மாவட்டம். | 12000.000 | 17650.346 |
| | மொத்தம் | **240520.000** | **209471.837** |
| | பொதுத்துறை திருவாளர்கள் | | |
| 17 | மதுரா சுகர்ஸ், மதுரை மாவட்டம். (இயங்கவில்லை) | 6000.000 | 0.000 |
| 18 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை லிமிடெட், தஞ்சாவூர் மாவட்டம். | 16502.922 | 14696.310 |
| 19 | பெரம்பலூார் சர்க்கரை ஆலை லிமிடெட், பெரம்பலூார் மாவட்டம். | 12000.000 | 12439.168 |
| | மொத்தம் | **34502.922** | **271 35.478** |
| | தனியார் துறை திருவாளர்கள் | | |
| 20 | எஸ்.வி. சுகர் மில்ஸ், காஞ்சிபுரம் மாவட்டம். | 29100.000 | 10967.651 |
| 21 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ், அலகு–1, தேனி மாவட்டம். | 12000.000 | 23659.200 |
| 22 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ், அலகு –1, திருநெல்வேலி மாவட்டம். | 12600.000 | 15025.000 |
| 23 | சக்தி சுகர்ஸ், அலகு – 1, சிவகங்கை மாவட்டம். | 12000.000 | 23705.020 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 24 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ், அலகு–1, ஈரோடு மாவட்டம். | 12194.750 | 31676.000 |
| 25 | சக்தி சுகர்ஸ், அலகு – 2, ஈரோடு மாவட்டம். | 19278.000 | 56738.180 |
| 26 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ், தஞ்சாவூர் மாவட்டம். | 24000.000 | 19308.000 |
| 27 | இ.ஐ.டி. பாரி ( இந்தியா ) லிமிடெட், கடலூர் மாவட்டம். | 18600.000 | 69276.700 |
| 28 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் , அலகு–2, விழுப்புரம் மாவட்டம். | 13000.000 | 60429.378 |
| 29 | பொன்னி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ், நாமக்கல் மாவட்டம். | 13755.000 | 31600.910 |
| 30 | திரு ஆரூரான் சுகர்ஸ் , அலகு – 1, கடலூர் மாவட்டம். | 24000.000 | 28893.000 |
| 31 | திரு ஆரூரான் சுகர்ஸ், அலகு–2, தஞ்சாவூர் மாவட்டம். | 17333.725 | 18223.694 |
| 32 | இ.ஐ.டி. பாரி ( இந்தியா ) லிமிடெட், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 11000.000 | 32973.400 |
| 33 | இ.ஐ.டி. பாரி ( இந்தியா ) லிமிடெட், கரூர் மாவட்டம். | 21773.000 | 27371.000 |
| 34 | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 10459.000 | 22286.940 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 35 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ், அலகு–2, திருவண்ணாமலை மாவட்டம். | 15000.000 | 39926.750 |
| 36 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ், கடலூர் மாவட்டம். | 38000.000 | 33820.095 |
| 37 | இ.ஐ.டி. பாரி ( இந்தியா ) லிமிடெட், புதுக்கோட்டை மாவட்டம். | 10000.000 | 38262.000 |
| 38 | அருணாசலம் சுகர்ஸ், திருவண்ணாமலை மாவட்டம். (இயங்கவில்லை) | 0.000 | 0.000 |
| 39 | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், பெரம்பலூர் மாவட்டம். | 16000.000 | 29455.000 |
| 40 | சக்தி சுகர்ஸ் லிமிடெட், அலகு–3, ஈரோடு மாவட்டம். | 4000.000 | 19442.000 |
| 41 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ், அலகு–3, விழுப்புரம் மாவட்டம். | 5000.000 | 45333.000 |
| 42 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு–3, விழுப்புரம் மாவட்டம். | 13000.000 | 30649.300 |
| 43 | தனலக்ஷ்மி ஸ்ரீனிவாசன் சுகர்ஸ் பிரைவேட் லிமிடெட், பெரம்பலூர் மாவட்டம். | 12000.000 | 9920.000 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 44 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ், திருவண்ணாமலை மாவட்டம். | 6000.000 | 36420.810 |
| 45 | எம்பீ சுகர்ஸ், திருநெல்வேலி மாவட்டம். (இயங்கவில்லை) | 20000.000 | 104.600 |
| 46 | மெட்ராஸ் சுகர்ஸ், விழுப்புரம் மாவட்டம். | 5000.000 | 46565.000 |
| | மொத்தம் | **395093.475** | **802032.628** |
| | ஒட்டு மொத்தம் | **670116.397** | **1038639.943** |

# இணைப்பு – 3

## தமிழ்நாட்டில் உள்ள வடிப்பாலைகளின் விவரம்

| வ. எண். | உரிமதாரரின் பெயர் | அனுமதிக்கப் பட்ட தெளிந்த சாராவியின் உற்பத்தி திறன் நாளொன்றுக்கு (கிலோ லிட்டர்) | அனுமதிக்கப் பட்ட தெளிந்த சாராவியின் ஆண்டு உற்பத்தி திறன் (கிலோ லிட்டர்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | கூட்டுறவுத்துறை திருவாளர்கள் | | |
| 1 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாமக்கல். | 55 | 16500 |
| 2 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருப்பூர். | 55 | 16500 |
| | தனியார் துறை திருவாளர்கள் | | |
| 3 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட், ஈரோடு. | 67.5 | 20250 |
| 4 | சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஈரோடு. | 120 | 36000 |
| 5 | ஈ.ஐ.டி.பாரி ( இந்தியா ) லிமிடெட், கடலூர். | 75 | 22500 |
| 6 | திருச்சி டிஸ்டிலரீஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி. | 60 | 18000 |
| 7 | சதன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், விழுப்புரம். | 20 | 6000 |
| 8 | மோகன் புரூவரீஸ் & டிஸ்டிலரீஸ் லிமிடெட், காஞ்சிபுரம். | 62 | 18600 |

| | | | |
|---|---|---|---|
| 9 | கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், கடலூர். | 80 | 26400 |
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** |
| 10 | திரு ஆரூரான் சர்க்கரை ஆலை, தஞ்சாவூர். | 60 | 19800 |
| 11 | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி. | 60 | 20700 |
| 12 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், தேனி. | 45 | 13500 |
| 13 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருநெல்வேலி. | 60 | 18000 |
| 14 | பவானி டிஸ்டிலரீஸ் & கெமிக்கல்ஸ் , வேலூர். | 44 | 13200 |
| 15 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட், கடலூர். | 70 | 21000 |
| 16 | ஈ.ஐ.டி.பாரி ( இந்தியா ) லிமிடெட், சிவகங்கை. | 74 | 22200 |
| 17 | எஸ்.வி. சுகர்ஸ் , காஞ்சிபுரம். | 100 | 30000 |
| 18 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், விழுப்புரம். | 80 | 24000 |
| 19 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், விழுப்புரம். | 100 | 30000 |
| | மொத்தம் | 1287.5 | 393150 |

# இணைப்பு – 4

## எத்தனால்  தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள வடிப்பாலைகளின் விவரம்

| வ.எண். | வடிப்பாலையின் பெயர் | அனுமதிக்கப்பட்ட எத்தனால் உற்பத்தி அளவு நாளொன்றுக்கு (கிலோ லிட்டர்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | கூட்டுறவுத்துறை திருவாளர்கள் | |
| 1. | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை. | 30 |
| 2. | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை. | 30 |
| | தனியார் துறை திருவாளர்கள் | |
| 3. | சக்தி சுகர்ஸ் லிமிடெட். | 50 |
| 4. | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட். | 45 |
| 5 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட். | 30 |
| 6. | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட். | 30 |
| 7. | ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட். | 45 |
| 8. | திரு ஆரூரான் சர்க்கரை லிமிடெட். | 60 |
| | மொத்தம் | **320** |

# இணைப்பு – 5

## <u>இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு  மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்</u>

| வ . எண் | உரிமதாரரின் பெயர் | உரிமம் வழங்கப்பட்ட நாள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான  உற்பத்தி நிறுவனங்கள் திருவாளர்கள் | |
| 1 | மோகன் புரூவரீஸ் & டிஸ்டில்லரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 10.05.1982 |
| 2 | சதர்ன் அக்ரிபுரேன் இண்ட்ஸ்டிரீஸ் (பி) லிமிடெட், விழுப்புரம். | 10.02.1983 |
| 3 | சிவா டிஸ்டில்லரீஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | 25.05.1983 |
| 4 | எம்பீ டிஸ்டில்லரீஸ் லிமிடெட், காஞ்சிபுரம். | 29.09.1984 |
| 5 | யுனைடெட் ஸ்பிரிட்ஸ்  லிமிடெட், திருவள்ளூர். | 31.12.1984 |
| 6 | மிடாஸ் கோல்டன் டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 21.04.2003 |
| 7 | எலைட் டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட்,  காஞ்சிபுரம். | 27.09.2008 |

| | | |
|---|---|---|
| 8 | எஸ்.என்.ஜெ. டிஸ்டில்லர்ஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 03.02.2009 |
| 9 | கால்ஸ் டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், புதுக்கோட்டை. | 07.07.2009 |
| (1) | (2) | (3) |
| 10 | கோல்டன் வாட்ஸ் (பி) லிமிடெட், திருவாரூர். | 29.12.2010 |
| 11 | இம்பீரியல் ஸ்பிரிட்ஸ் & ஒயின் (பி) லிமிடெட், கோயம்புத்தூர். | 04.11.2011 |
| | பீர் உற்பத்தி நிறுவனங்கள் திருவாளர்கள் | |
| 1 | மோகன் புரூவரீஸ் & டிஸ்டில்லரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 21.05.1984 |
| 2 | எம்பீ புரூவரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 12.02.1992 |
| 3 | யுனைடெட் புரூவரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 17.11.1995 |
| 4 | எஸ்.என்.ஜே. புரூவரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 11.01.2011 |
| 5 | கால்ஸ் புரூவரீஸ் (பி) லிமிடெட், புதுக்கோட்டை. | 08.12.2011 |
| 6 | அப்போல்லோ டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், திருவள்ளூர். | 28.03.2012 |
| 7 | ஏ. எம். புரூவரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 04.10.2013 |
| | ஒயின் உற்பத்தி நிறுவனம் திருவாளர் | |
| 1 | கம்பம் வேலி ஒயினரி (பி) லிமிடெட், தேனி. | 12.01.2010 |